மாலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 16 செவ்வாய்க்கிழமை 01.08.2023 அதிர்வு 01

## மனோ அணியினருடன் இந்தியத் தூதர் பேச்சு



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையில் எதிர்வரும் 04



# ரணிலுடன் நேரடியாகப் பேசி முடிவுகட்ட சம்பந்தன் முடிவு!

## இழுத்தடிக்க இடமே கொடாமல் தீர்மானம் எடுக்க அவர் தீர்மானம்

**கொழும்பு, ஓகஸ்ட் 01**

**இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தை இனவாத மயப்படுத்தி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமது பிரசார ஆயுதமாக அதைப் பயன்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குறுகிய அரசியல் தந்திரோபாய முயற்சிக்கு இடமேயளிப்பதில்லை என்று தீர்க்கமாக முடிவுகட்டி இருக்கும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரடியாகத் தனித்துச் சந்தித்துப் பேசி, 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' அவரிடம் தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தவும் தீர்மானித்திருக்கின்றார் என்று அறியவருகிறது.**

இதற்காக அடுத்து வரும் தினங்களில் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசுவதற்கும் நடவடிக்கை எடுக்கிறார் என்று கூறப்பட்டது.

தமது வயோதிபம் கருதி இந்தச் சந்திப்புக்கு அவர் தம்முடன் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி 04

## '13' குறித்து முடிவு எடுக்க இரு வாரங்கள் காலக்கெடு

### நாடாளுமன்றுக்கு வழங்கினார் ரணில்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

அதற்கேற்ப கட்சித் தலைவர்கள் அவர்களது யோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கு இரண்டு வார கால 05


## எம் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு!

### சம்பந்தன் கடும் சீற்றம்

"எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இதை உணர்ந்து இலங்கை அரசு செயற்பட வேண்டும்" – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இன்று காலை வலியுறுத்தினார்.

இந்த அரசு எம்மை ஏமாற்றும் அளவுக்கு நாம் அடிபணிந்து போகமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார். 05

## இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை!



### ரணிலிடம் மோடி எடுத்துரைத்தார் என்று கூட்டமைப்பிடம் தூதர் நேரில் தெரிவிப்பு

"இலங்கை விடயத்தில் இந்தியாவின் ஈடுபாடு பொருளாதார ஒத்துழைப்பு பற்றியதாக இருந்தாலும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை அண்டியதாகவே அதுவும் இருக்கும். அதிலிருந்து இந்தியா ஒருபோதும் விலகாது. இதை டில்லி வந்திருந்த இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 04

### ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன்

# கூட்டமைப்பு எம்.பிக்கள் ரணிலுடன் சங்கமிப்பர்!

## சஜித் அணியினரும் வருவது உறுதி என்கின்றார் பிரசன்ன



"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளுங்கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும்" - என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஆளுங்கட்சியில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கதான் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று உறுதியாக உள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் இந்த உண்மை பகிரங்கமாகத் தெரியவரும்.

அதேவேளை, எதிரணியில் உள்ள வர்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பெரும்பாலானவர்கள் மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வரவேண்டும் என்று விரும்புகின்றனர். சஜித் கட்சியில் உள்ளவர்களில் பலர் ரணிலுக்கு மறைமுக ஆதரவைத் தற்போது வழங்கி வருகின்றனர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர்கள் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளிவந்தவுடன் எதிரணியில் உள்ளவர்கள் ரணிலுடன் கைகோப்பார்கள். இதுதான் உண்மை நிலைவரம்.

இதை விடுத்து ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஆளும் தரப்பில் உள்ள ஒரு சிலர் வெளியிடும் முரண்பட்ட கருத்துக்களுக்குச் செவிசாய்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.

# ரணிலை நிராகரிக்க முடியாது!

## பந்துல கருத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவாராயின் அவரை நிராகரிப்பதற்குக் காரணங்கள் எதுவும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

"ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு இன்னும் வெளிவரவில்லை. ஆனால், ஆளுங்கட்சியில் உள்ள ஒரு சிலர் முந்திக்கொண்டு மேடைகளில் ஏறி ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவாராயின் அவரை நிராகரிப்பதற்குக் காரணங்கள் எதுவும் இல்லை.

வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீட்டெடுத்து வரும் ஒரு தலைவராக அவர் விளங்குகின்றார். இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் யார் வேட்பாளர் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவிக்கும். அதுவரை அனைவரும் பொறுமையாக இருக்க வேண்டும்." - என்றார்.

# வட்டவளையில் பள்ளத்தில்

## புரண்ட பஸ் 18 பேர் காயம்



கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த - இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததில் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பு - ஹட்டன் பிரதான வீதியில் வட்டவளை சிங்களக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

எதிர்த் திசையில் பயணித்த பஸ்ஸிற்கு வழிவிட முற்பட்ட போது இந்த பஸ் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது என்று கூறப்படுகின்றது. அதில் சுமார் 18 பயணிகள் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் முதலில் அனுமதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த ஐந்து பேர் ஆபத்தான நிலையில் பின்னர் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மற்றையவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று வட்டவளை பிராந்திய வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

விபத்தின் போது பஸ்ஸில் சுமார் 100 பயணிகள் பயணித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெளியாகிறது ‘முரசு’ நாளிதழ்




‘முரசு’ டிஜிட்டல் நாளிதழ் இன்று தொடக்கம் ‘காலை முரசு’, ‘மாலை முரசு’ இதழ்களாகத் தினசரி இரண்டு வேளைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகின்றது.

முதலாவது மாலை இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று ஒகஸ்ட் முதலாம் திகதி மாலை 5 மணிக்கு இதழின் ஆலோசக ஆசிரியர் என்.வித்தியாதரன் தலைமையில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் ஆரம்பமானது.

நிகழ்வின் ஆரம்பக் காட்சிகள் சிலவற்றைப் படங்களில் காணலாம்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## இந்தியாவின்...

தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதுமில்லை.

– இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இன்று நேரில் தெரிவித்தார்.

எனவே, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதற்கமைவாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் நேரில் தெரிவித்துள்ளார் என்றும் இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தல் விரைந்து நடத்தப்பட வேண்டும் எனவும் இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார் என்று இந்தியத் தூதுவர் மேலும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் இன்று முற்பகல் கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் இந்தியத் தூதுவருடன் பிரதித் தூதுவர், அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சி.சிறிதரன், கோவிந்தன் கருணாகரம், சார்ள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன் ஆகியோர் பங்கேற்றனர். ஏனைய எம்.பிக்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், இரா.சாணக்கியன், எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது, என்னென்ன விடயங்கள் இந்தியத் தரப்பால் அறிவுறுத்தப்பட்டன என்பது குறித்து இந்தியத் தூதுவர் விளக்கமளித்தார். அத்துடன் இலங்கை – இந்தியக் கூட்டறிக்கை உட்பட ரணிலின் விஜயத்தை ஒட்டிய ஆவணங்களின் பிரதிகளை கூட்டமைப்பின் எம்.பிக்களிடம் இந்தியத் தூதுவர் கையளித்தார்.

## ரணிலுடன்...

எம்.ஏ.சுமந்திரனை வழமை போல உதவிக்கு அழைத்துச் செல்வார் என்றும் தெரிகிறது.

மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஏற்கனவே 13 ஆம் திருத்தம் மூலம் அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டு, அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கவும் பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், 2016 முதல் 2019 வரை நல்லாட்சி அரசின் காலத்தில் அச்சமயம் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் தீர்வுக்கான வழிவகைகள் தொடர்பாக தமிழர் தரப்பு ஏற்கனவே விரிவாகப் பேசி, காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கும் பூர்வாங்க இணக்கமும் கண்டுள்ளது. அந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்குப் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவிலும், அரசமைப்புப் பேரவையாக இயங்கிய நாடாளுமன்றத்திலும் கூட முழு அளவில் அடிப்படை இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்தகைய சூழலில், இப்போது வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் தமக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தும் ஒரே குறுகிய நோக்கத்துக்காக, ஏற்கனவே அரசமைப்பில் இருக்கும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்காமல் தவிர்க்கும் பேரினவாத மேலாண்மைத் திட்டம் ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திடீரென முன்வைத்து, புதிய இனவாத அரசியல் குழப்பங்களை உருவாக்குகின்றார் என்று கருதும் சம்பந்தன், ஜனாதிபதியின் அந்தப் போக்குக் குறித்துக் கடும் சீற்றத்தில் இருக்கின்றார் என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

இந்தப் போக்கு, தமிழர் தரப்பிடம் வேகாது என்று 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' நேரடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைக்கவும், இந்தக் குழப்பப் போக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தால், 2005 ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை இழந்து, அதனால் வெற்றி வாய்ப்பைக் கோட்டைவிட்ட அதே துரதிர்ஷ்ட நிலைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு 2024 இலும் மீண்டும் ஏற்படும் என்று எச்சரிக்கவுமே அவரை நேரில் சந்திக்க சம்பந்தன் விரும்புகின்றார் என்று தெரிகின்றது.

## மனோ அணியினருடன்...

4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தியத் தூதுவரின் அழைப்பை ஏற்று நிகழும் இந்தச் சந்திப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியத் தூதுவர் இன்று கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co | www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

NORTH WALL
ENGINEERING

யாழ் மண்ணில்
அனைத்து
கட்டுமான
தேவைக்கும்!!!
சேவைக்கும்!!!

நோர்த் வோல்
என்ஜினியரிங்

Nelliady, Karaveddy
Jaffna.
0777818208
0774002766

# வவுனியா இரட்டைப் படுகொலை சந்தேகத்தில் ஐந்து பேர் கைது



வவுனியா, ஓக.01

வவுனியா தோணிக்கல்லில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலை சம்பவம் தொடர்பில் ஒரு வாரத்தின் பின்னர் 5 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சம்பந்தப்பட்ட வீடு ஒன்றினுள் புகுந்த குழு ஒன்று வீட்டு உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன் பெட்ரோலை ஊற்றி வீட்டுக்கும் தீயிட்டது.

இந்தச் சம்பவத்தில் மூச்சுத் திணறல் காரணமாக 21 வயது இளம் குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 10 பேர் படு காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

சம்பவத்தில் எரிகாயங்களுக்கு ஆளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த, சம்பவத்தில் இறந்த பெண்ணின் கணவனும் பின்னர் உயிரிழந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பிலிருந்து வருகை தந்த பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த நிலையில் இந்தப் பகுதி மக்களிடம் வாக்கு மூலங்களைப் பெற்றிருந்த பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் ஐந்து பேரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் விலைகளில் மாற்றம் ஓட்டோ கட்டணத்தில் மாற்றமில்லை

## அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் ஒன்றியம் தெரிவிப்பு

ஓட்டோ கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படாது என்று அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கட்டண திருத்தம் தொடர்பில் கிரமமான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் ஓட்டோ சாரதிகள் ஒன்றியத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

அரசின் எரிபொருள் விலை மாற்றத்துக்கு ஏற்ற வகையில் கட்டண திருத்தத்தை மேற்கொள்வதில்லை என்று ஒன்றியம் தீர்மானித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடிக்கையாளர்களுடன் பேசி கட்டணம் தொடர்பில் தீர்மானிக்குமாறு ஓட்டோ சாரதிகளுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நள்ளிரவுடன் நடைமுறைக்கு வரும் வகையில் பெட்ரோல் டீசல் என்பவற்றின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

**13 குறித்து...**

அவகாசம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

'13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் இருப்பது ஜனாதிபதியாகிய என்னிடமல்ல நாடாளுமன்றத்திடம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சிக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

அதன்படி 13 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பான பொறுப்பு எம்.பிக்களின் கைகளுக்கு வந்துள்ளது.

இதை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனையை முன்வைப்பதற்குக் கட்சித் தலைவர்களுக்கு இரண்டு வார கால அவகாசத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான அமைச்சரவை உப குழு அந்த யோசனையை ஆராய்ந்து பார்த்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

**எம் பொறுமைக்கும்...**

"புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும், வடக்கு – கிழக்கில் சரித்திர ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் போன்ற விடயங்களில் எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடம் எங்கள் உறுதியான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம்" என்றும் சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உறவுப் பாலம் சமைப்போம்!

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணயத்துக்கான எழுச்சி - தேச மற்றும் தேசிய விடுதலைப் போராட்டம் - ஓர் இக்கட்டான கட்டத்துக்குள் - சிக்கலுக்குள் - சிக்குண்டு இருக்கும் அவலச் சூழல் இது. நமக்கு, வரலாற்றில் முன்னெப் போதும் இல்லாத சவால்மிக்க வேளை இதுதான்.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் கொடூரப் பிடி இலங்கை தேசத்தின் அரசுக் கொள்கையாக விஸ்வரூபம் கொண்டு நம்மை அடக்கி, முடக்கி, அடிமைப்படுத்தி, நிரந்தரமாக ஒடுக்கி விட ஆக்ரோஷத்துடன் முழக்க மிட்டு நிற்கின்றது. தமிழருக்கு - தமிழினத்துக்கு - எதிரான அரச பேரினவாத ஒடுக்குமுறை இங்கு மேலாண்மை பெற்று, உச்சத்தைத் தொட்டு நிற்கும் சமயத்தில், அதை எதிர்கொண்டு, மீள வழியின்றி, அந்த ரித்து, அல்லல்பட்டு, அவலப்பட்டு, அலவாய்ப்பட்டு நிற் கின்றோம் நாம்.

தமிழர் தேசியத்தின் - தேசத்தின் - வடிவத்தையும், அடையாளத்தையும், நிலைத்தலையும் சிதைத்தழிக்கும் பேரினவாதத்தினுடைய கொடூர அடக்குமுறை ஆபத்தின் அச்சுறுத்தலை தமிழ் மக்கள் உணர்ந்து, மாபெரும் மக்கள் சக்தியாக தமக்குள் ஒன்றிணைந்து, அதனை எதிர் கொண்டு உருக்குமலையாக நிற்பது இப்போதைய காலத் தின் தவிர்க்க முடியாத கட்டாயமாகும். ஈழத்தமிழ் மண்ணின் - ஈழத் தமிழர்களின் - இனத்துவம், வரலாற்று - வாழ்வியல் உரிமைகள் போன்றவை அழிந்து போகா மல், நின்று, நிலைத்து, நிலைபேறாக நீடிக்கச் செய்ய இதுவே ஒரே வழி.

சாதிகள், வர்க்கங்கள், பிரிவுகள் கடந்து, ஈழத் தமிழி னம் ஒரு தேசமாக - தேசியமாக - ஐக்கியப்பட்டு, பேரின வாத மேலாண்மையை உருக்கு மலையென எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பமும் இதுதான். தமிழர் தேசத்தைப் பேரினவாதம் கபளீகரம் செய்து, அழித்தொழிப்பதில் இருந்து தப்பிப் பிழைக்க, நமக்கு அதுவே இன்று ஒரே வழி மார்க்கம்.

ஆனால் நாமோ சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு அரசியல் ரீதியாகவும், சித்தாந்தங்கள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையிலும், பல்வேறு குழுக்களாகவும், பிரிவுகளாகவும், அணிகளாகவும், குழு மங்களாகவும், கன்னைகளாகவும் பிளவுபட்டு, துண்டாகி, பிரிந்து நிற்கும் பேரவலமே இங்கு தொடர்கின்றது.

நம்மை விழுங்கி விட எக்காளமிட்டு நிற்கும் பேரின வாதத்துக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தரும் வகையில் - போக்கில் - ஈழத் தமிழினம் சிதறி, பிளவு ண்டு, பிரிந்து, வேறுபட்டு நிற்கின்றது. அல்லது நம்மை - நமது தமிழினத்தை - ஏப்பமிடத் துடிக்கும் பேரின வாதத்துக்கு அரசியல் ரீதியாக முண்டு கொடுக்கும் வரலாற்று துரோகத்தில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பேரவல நிலையிலிருந்து மீள்வதற்கு, தமிழர் தேசத்தை ஒன்றுபட்ட சக்தியாக இணைத்து, பிணைத்து, ஒற்றுமைப்படுத்தி, ஓர் அணியில் மீளெழுச்சி பெற வைக்கும் வரலாற்றுக் கட்டாயம் எழுந்துள்ளது. நம் தோள் மீது அந்த வரலாற்றுக் கடப்பாடு வீழ்ந்துள்ளது.

அந்த இனத்துவ ஐக்கியம் என்பது உள்ளூரில் மட்டுமல்ல, உள்நாட்டில் மட்டுமல்ல, அவற்றையும் கடந்து உலகளாவிய ரீதியிலும் கூட அத்தியாவசிய மானது. அதனை உணர்ந்து, அதற்காக முரசறையும் மகத் தான பணியை முன்னெடுக்க இன்று முதல் காலை, மாலை இதழ்களாக முகிழ்கின்றது உங்களின் இந்த முரசு.

'உலகத் தமிழர்களின் உறவுப் பாலம்' என்ற மகுட வாக்கியத்துடன் உற்பவிக்கும் முரசு இதழின் இலக்கும், நோக்கும், போக்கும் அதுவே.

தமிழர் தேசியத்துக்கு எதிரான பௌத்த, சிங்கள ஒடுக்கு முறையின் - மேலாண்மையின் - கொடூர போக்கு களை எதிர்கொண்டு மீண்டெழ ஒன்றுபட்ட சக்தி யாக உருக்கொள்வோம். அதற்காக முரசறைவோம். வாருங்கள்!

## இங்கும் நீதிமன்றங்கள் டிஜிட்டல் மயமாகின்றன




நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் இணைக் கப்படவுள்ளன.

இதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு வெளி யிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னோடித் திட்டமாகக் காகிதமில்லா டிஜிட்டல் நீதி மன்றம் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் பிரேரணையின் பிரகாரம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாகக் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

நீதி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எச்.சஞ்சீவ சோமரத்ன ஆகியோருக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐஸ் போதையாளர்கள் ஐம்பதாயிரம் பேராம்!



இலங்கையில் சுமார் 50 ஆயிரம் ஐஸ் போதைப் பொருள் பாவனையாளர்கள் இருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று தேசிய அபாய கர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

அபாயகர ஔடதங்கள் சபையின் தலைவர் சட்டத் தரணி சாக்கிய நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஐஸ் போதைப்பொருள் பரவி மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில், ஏனைய போதைப் பொருள்களுடன் ஒப்பிடும் போது, அதன் பரவல் கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் காணப்படுகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாடசாலை அமைப்பில் புகையிலை பாவனையின் போக்குக் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பாடசாலை அமைப்பில் நாம் அடிக்கடி புகையிலைப் பாவனையைப் பார்க்கிறோம். வீட்டிலேயே புகை யிலையைச் செய்து சுண்ணாம்புடன் கலந்து வாயில் வைக்கும் பழக்கம் மாணவர்களிடையே காணப்படு கின்றது. புகையிலையால் ஏற்படும் போதைக்கு அவர்கள் பழக்கப்பட்டுள்ளனர்" என்று தேசிய அபாயகர ஔடதங் கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கையில் சட்டவிரோத கஞ்சா பாவனையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி நாட்டில் சட்டவிரோத கஞ்சா பாவனையாளர் களின் எண்ணிக்கை மூன்று லட்சத்திலிருந்து மூன்றரை லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை தற்போது நாட்டில் புகையிலை பாவனை யாளர்களின் எண்ணிக்கை 15 லட்சமாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்குப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தேசிய மருந்துக் கொள்கையை உருவாக்குவதற்கான முக்கியமான கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றும் தெரிவித்தார்.

# ரணிலுக்கு ஆதரவு திரட்ட மலர்கிறது புதிய கூட்டணி



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா, நிமல் லான்சா ஆகியோர் தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் முதலாவது பொதுக்கூட்டம், 2024 ஜனவரியில் நடைபெறவுள்ளது என தெரிய வருகின்றது.

இது விடயம் சம்பந்தமாக கொழும்பில் கடந்தவாரம் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேம ஜயந்த, லசந்த அழகியவண்ண, நளின் பெர்னாண்டோ, மஹிந்த அமரவீர, பிரியங்கர ஜயரத்ன உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது சமகால மற்றும் எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. அவ்வேளையிலேயே முதலாவது கூட்டத்தை ஜனவரி 19ஆம் திகதி நடத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டுள்ளது.

அதுவரை புதிய அரசியல் கூட்டணி குறித்து கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு,தெளிவுப்படுத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் 2024 முற்பகுதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# மாணவர் சிகையலங்காரம் குறித்து ஆராய்ந்து வழிகாட்டல் தீர்மானம்

## திருக்கோவிலில் ஆக்கபூர்வமான கூட்டம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

மாணவர்களது சிகையலங்காரத்தில் சீரான ஒழுங்கு முறையைப் பேணுதல் தொடர்பான விசேட கூட்டமொன்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மாணவர்களின் சிகை அலங்காரம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் இந்தக் கால கட்டத்தில், பயன்மிக்க இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கான சிகையலங்காரம் பாடசாலையின் சட்ட திட்டங்களுக்கு அமைவான முறையில், ஒழுக்கமானதாக சகல சிகை அலங்கார நிலையங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கை சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனை திருக்கோவில் கல்வி வலயப் பிரதேசத்தில் முழுமையாக அமுலாக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டு, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் செயலகக் கேட்போர் கூடத்தில், தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகளை சீரமைத்தல், அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பான விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக்கலந்துரையாடலில்,அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவித்தல், மாலை நேரங்களில் மைதானங்களில் மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடும் கலாச்சாரத்தை ஏற்படுத்துதல், வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் ஆலயங்களுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவித்தல, திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட தரம்-9 மற்றும் அதற்குட்பட்ட தரங்களை சேர்ந்த மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணிக்குப் பின்னரும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் வகுப்புக்களை நடத்துவதில்லை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுத் தீர்மானங்கள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

இந்தத்தீர்மானம் 25.07.2023 முதல் நடைமுறைப்படுத்தப்படுமென தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன் ஆகியோரது இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மதத்தலைவர்கள், திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ப. மோகனகாந்தன், திருக்கோவில் பொது சுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், திருக்கோவில் வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், சிகைஅலங்கார நிலைய உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.









# மனிதப் புதைகுழிகளை மறைக்கவே இராணுவ ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பு!



## குமுறுகின்றார் செல்வம் எம்.பி.

முல்லைத்தீவு, ஒக.01

“மக்கள் கூண்டோடு படுகொலை செய்யப்பட்டமையை மறைப்பதற்கே அங்கங்கு புத்த கோவில்கள் அமைக்கப்படுகின்றன” – என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

“மக்களைப் படுகொலை செய்த இராணுவத்தினருடைய முகாம்களுக்கு அருகாமையிலேயே இப்போது மனித எச்சங்கள் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்படுகின்றன.

“இவ்வாறு தொடர்ச்சியாக அழிக்கப்பட்ட மக்களுடைய மனித எச்சங்கள் கிளம்புகின்ற போது அவற்றை மூடி மறைக்கின்ற செயற்பாட்டையே இலங்கை அரசு தொடர்ந்து கொண்டிருக்கிறது.” – என்றும் அவர் கூறினார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும், அவை தொடர்பில் சர்வதேச நிபுணத்துவம் மற்றும் கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் 28ஆம் திகதி முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

“மக்களுடைய எழுச்சிப் போராட்டம் வெற்றி அளிக்க வேண்டும். அதுதான் நீதி. அதுதான் நியாயம். மக்களைப் படுகொலை செய்த இராணுவத்தினுடைய முகாமுக்கு அருகாமையில் இப்போது மனித எச்சங்கள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மன்னாரில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை தற்போது மூடப்பட்டிருக்கின்றன.

“இவ்வாறு தொடர்ச்சியாக அழிக்கப்பட்ட மக்களுடைய மனித எச்சங்கள் கிளம்புகின்ற போது அவற்றை மூடி மறைக்கும் செயற்பாட்டை–யே இலங்கை அரசு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

“இந்தப் போராட்டம் நிச்சயமாக உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

“எங்களுடைய இனத்தின் நிலங்களை அபகரிக்கும் விடயங்களாக இருக்கலாம், எங்களுடைய இனத்தின் பிரச்சினையாக இருக்கலாம், மக்களுடைய போராட்டங்களாக இருக்கலாம் அவ்விடயங்களில் இந்தக் கட்சிகள், வெறும் வாயளவிலோ, உதட்டளவிலோ தங்களுடைய கருத்துக்களைச் சொல்லாமல், அதையும் தாண்டி ஒரு குடையின் கீழ் அணி திரள்கின்ற போதுதான் நாங்கள் எங்களுடைய இனத்தின் பாதுகாப்பைப் பேண முடியும்.

“மக்களுடைய நன்மைக்காக, இந்த நிலத்துக்காக, அதன் மீட்புக்காக பல போராளிகள் மாண்டிருக்கின்றனர். பல இயக்கங்கள் இதற்காக அர்ப்பணிப்பைச் செய்திருக்கின்றன.

“ஆகவே இந்த விடயத்தில், தேசியத்தை நேசிக்கும் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு எங்களுடைய மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு – அவர்களைக் காப்பாற்றுவதற்கு – உரிய முயற்சிகளை ஒன்று திரண்டு மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு கொள்கிறேன். அதனை நான் ஓர் அறைகூவலாகவும் விடுகிறேன்.” – என்றார்.

# திருட்டுச் சந்தேக நபரின் வைப்பில் 3 கோடி ரூபா

## பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக.02

மானிப்பாய் பகுதியில் நடைபெற்ற திருட்டுச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவரது வங்கிக் கணக்கில் சுமார் மூன்று கோடி ரூபா வைப்பில் உள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மானிப்பாய் பகுதியில் நான்கு கோவில்களை உடைத்து பணம் மற்றும் தங்கப் பொருட்களை திருடினார் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரின் வங்கிக் கணக்குகளில் சுமார் மூன்று கோடி ரூபா பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளமையைக் கண்டு பிடித்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் உள்ள நான்கு பிரதான கோவில்களில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஐந்தாவது ஆலயத்தில் திருட்டு மேற்கொள்ள முனைந்தபோது பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தத் திருட்டுகளுடன் சம்பந்தப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ள நபர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் கோவில்களில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராக்களில் உள்ள காட்சிகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மாகாணசபைத் தேர்தல்களை நடத்தக் கோருவதும் அதிகாரப் பகிர்வைக் கேட்பதுவும் முரணானவையல்ல!

## ரணிலுடனான இழுபறி தொடர்பில் சுமந்திரன் விளக்க அறிக்கை

உடனடியாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக் கோருகின்றமைக்கும், மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும் கூறுவதானால் ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை.


– இவ்வாறு விளக்க அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார் யாழ்ப்பாண மாவட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

இந்த அறிக்கையானது, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், நீண்டகாலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் வெளியிடப்படுகின்றது.

தமிழ் மக்கள், 1956 ஆம் ஆண்டு முதல், வடக்கு – கிழக்கில் சமஷ்டி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணையை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர். 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, இதில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வும் வழங்கப்பட்டிருந்தது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற – தமிழர்களுக்கு எதிரான – வன்முறைகளின் விளைவாக இந்தியா வழங்கிய அனுசரணைகளை இலங்கை ஏற்றுக்கொண்டமை முதல் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசாங்கம் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. மிக சமீபத்தில் கூட, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்துக்கான மறுகட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார். மேலும் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும், இலங்கையின் தமிழ் சமூகத்துக்கு சுயமரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யவும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என்றும் அவர் தனது நம்பிக்கையை தெரிவித்திருந்தார்.



பின்னர், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் இந்திய வெளியுறவுச் செயலாளர் பின்வருமாறு கூறியிருந்தார்:–

“ஒன்றுபட்ட மற்றும் வளமான இலங்கை எனும் கட்டமைப்புக்குள் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள், நிச்சயமாகச் சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதைக்கான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்து எதிர்நோக்குகிறது என்ற உண்மையின் அடிப்படையில் இதைவிட வெளிப்படையாக எதுவும் இருக்க முடியாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் என்பன இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கும், அதனை எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என்று பிரதமர் மேலும் தெளிவாகக் கூறியிருந்தார். இதுவே எங்களின் நிலையான நிலைப்பாடாக இருந்து வருகின்றதோடு, இது இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போதும் முன்வைக்கப்பட்டது.”

1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கையின் அரசமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலை நிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியப் பிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறு அரசமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாது விடுவது என்பது அரசமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும். எனவே எமது அரசமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். எனினும் அது கூட தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யாது. அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பல்வேறு செயல்முறைகள் மூலம் அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்பது, மங்கள முனசிங்க தெரிவுக் குழுவில் இருந்து 2016 - 2019 வரை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இடம்பெற்ற அரசமைப்பு பேரவைவரை, மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தின் போது இந்தியாவுடன் குறைந்த பட்சம் மூன்று தனித்தனி கூட்டு அறிக்கைகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சட்டக் காலதாமதங்கள் காரணமாக குறைபாடுகளுடன் இயங்கி வந்த ஒன்பது மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தத் தெரிவுக்குழு கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதாக இனங்கண்டு, முன்பு இருந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் எனப் பரிந்துரை செய்ததோடு இதைச் செயல்படுத்த தகுந்த சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இந்த பரிந்துரைகளுக்கு இணங்க நான் ஒரு தனி நபர் சட்டமூலம் ஒன்றைத் தயாரித்து முன்வைத்திருந்தேன். அதன் முதல் வாசிப்பு முடிந்த நிலையில் இந்த சட்டமூலம் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் இதில் உள்ள சில சரத்துகளில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செய்தால், அதனை நாடாளுமன்றத்தில் சாதாரணப் பெரும்பான்மை மூலம் சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2022 டிசெம்பர் 10 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டிலேயே மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம். ஜனாதிபதியுடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றமையுடன், 2023 ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் மீண்டும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்தினோம். கடந்த 2023ஆம்ஆண்டு ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் இதே நிலைப்பாட்டையே தெரிவித்தோம். இவ்விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. அவ்வாறே உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும் கூறுவதானால் ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை.

– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவையே நம்பியிருந்தால் தமிழருக்கு ஏமாற்றமே மிஞ்சுமாம்



## புதிய பாதை வகுக்கக் கோருகின்றார் சரா

இனியும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்காமல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாம் புது வியூகம் வகுக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரமுகரும் யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அம்பாந்தோட்டையில் சீனாவின் கடற்படைத்தளத்துக்குக் காணியைக் கொடுத்துவிட்டு, தலைநகர் கொழும்பில் சீனாவுக்குச் செயற்கை துறைமுக நகரம் உருவாக்க இடமளித்துவிட்டு, சீனாவின் பரம எதிரியான பாரத தேசத்துக்குச் சென்று அந்த நாட்டின் பிரதமரைச் சந்திக்கிறார் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

இந்தியாவின் தேவையை நிறைவேற்றும் வகையில் இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் தரைவழி போக்குவரத்துத் தொடர்பிலும் பேசி விட்டு வந்திருக்கின்றார் ரணில்.

இங்கேதான் சிங்களவர்களின் கெட்டித்தனத்தைப் பார்க்கவேண்டும். அவர்களால் சீனாவையும் சமாளித்து இந்தியாவையும் சமாளிக்க முடிகின்றது. ஆனால் நாங்கள் இந்தியா, இந்தியா என்று ஒற்றைப் புள்ளியில்தான் இருக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எப்போதும் இந்தியாவையே நம்பியிருந்திருக்கின்றனர். அதற்குப் பழக்கப்படுத்தியும் விட்டார்கள்.

இதனால்தான் என்னவோ நாங்கள் வேறு எதையும் சிந்திக்கத் தலைப்படாதவர்கள் ஆகிவிட்டோம்.

அல்லது அவ்வாறு சிந்திக்கவிடாமல் எங்களை வைத்திருக்கின்றார்கள்.

சீனாவுக்கு இடமளித்த பின்னரும் இந்தியாவுக்கு இலங்கை ஜனாதிபதியை அழைக்கும் நிலைமை இருக்கின்றது. ஆனால் இந்தியாவையே இன்றுவரை நம்பியிருக்கும் தமிழர்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கின்றது.

இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தம் இன்று 13 மைனஸில் வந்து நிற்கின்றது. 36 ஆண்டுகளாக 13 ஐச் சுற்றிச் சுற்றியே வந்துகொண்டிருக்கின்றோம்.

அதில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாகத் தேய்ந்து செல்கின்றது. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு அதிகாரப் பரவலாக்கமும் இப்படித்தான் இருக்கும்.

பகிரப்பட்ட எந்தவொரு அதிகாரமும் பறிக்கப்படாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. இவ்வாறான தொரு நிலையில் நாம் 13 ஐப் பற்றிப் பேசி இன்னமும் எவ்வளவு காலத்தை வீணடிக்கப்போகின்றோம்?

ஒன்றுமில்லாத 13 தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதால் அதற்கு அப்பால் நாம் யோசிக்கவில்லை. எமது சிந்தனைத் தளத்தை விரிவாக்க வேண்டும்.

இனியும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்காமல் இனப் பிரச்சினைத்தீர்வுக்கு நாம்புது வியூகம்வகுக்க வேண்டும். வல்லரசுகள் எங்களையும் நோக்கி வரச் செய்வதற்குத் திட்டங்கள் தீட்டவேண்டும்.

நாம் அவர்களுக்குத் தேவை என்பதை உணரச் செய்யும் போதுதான் எங்களின் கோரிக்கைகளை அவர்கள் காது கொடுத்துக் கேட்பார்கள். அதற்குரிய வகையில் புதியதொரு பாதையை உருவாக்க வேண்டும். - என தெரிவித்துள்ளார்.

# கடலரிப்பைத் தடுக்கப் போடப்பட்ட கருங்கற்கள் தொடர்பில் எச்சரிக்கை

## திருக்கோவிலில் தீர்த்தோற்சவ பக்தர்களுக்குத் தெரிவிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்ட பாரிய கடலரிப்பை கட்டுப்படுத்தும் முகமாக கடலோரத்தில் பாரிய கருங்கற்கள் போடப்பட்டுள்ளன. கடற்கரைக்குச் செல்வோர் அது குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் முன்புறம் உள்ள கடற்கரைப் பகுதியில் இக்கருங்கற்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தால் போடப்பட்டுள்ளன.

இதேவேளை ஆலய வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தற்போது திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஓகஸ்ட் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவடைகின்றது.

திருவிழாவுக்குச் செல்வோர் குழந்தைகளைக் கடற்கரைப் பகுதிக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என ஆலய நிர்வாகமும் பொலிஸாரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாகத் தீர்த்தம் ஆடும் வேளையில் மிகவும் அவதானமாக - கவனத்துடன் - செயற்படவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மீறினால் ஆபத்தைச் சந்திக்க வேண்டி நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவின் அழுத்தத்துக்கு அடிபணிகிறது கூட்டமைப்பு!

## விக்னேஸ்வரனையும் சேர்த்துக் கடுமையாக வைகிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் விக்கினேஸ்வரன் தரப்புக்கு இந்தியா கடும் அழுத்தம் கொடுக்கிறது. அதனாலேயே சமஷ்டிக்கு ஆணை பெற்றுவிட்டு, அவர்கள் 13 ஆவது திருத்தம் குறித்துப் பேசிக் கொண்டு, தமிழ் மக்களுக்குப் பச்சைத் துரோகங்களை இழைக்கின்றனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் கோரிக்கையே சமஷ்டிதான் என்ற உண்மையை சொல்ல இவர்களுக்கு முதுகெலும்பு இல்லை. இதனால்தான் மக்கள் ஆணையை மீறிச் செயற்படுகிறார்கள் என்று அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்துப் பேச்சு நடத்தி வருகின்றார். ஆனால் அது 13 ஆம் திருத்தம் தொடர்பில் என்றும், அந்த 13 இற்குக் கூட பொலிஸ் அதிகாரம் தரமாட்டோம் என்றும், இந்த 13 இற்கும் கூட அனைத்துத் தரப்பின் ஆதரவும் வேண்டுமென்றும் அறிவித்துவிட்டுத்தான் பேச்சுவார்த்தை எனக் கூறி நாடகமொன்றை நடத்துகின்றார்.

இந்த நாடகங்களுக்கு நாம் ஒரு போதும் துணை போகக் கூடாது. ஏனெனில் எமக்கு என்ன வேண்டுமென்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர, ஜனாதிபதி தீர்மானித்துள்ள விடயம் குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. அந்த அடிப்படையில் நாங்கள் இந்தப் பேச்சுக்கான அழைப்பை நிராகித்திருந்தோம்.

இதனை நிராகரிப்பதாக நாம் எடுத்திருக்கும் முடிவு தீர்க்க தரிசனமானது என்பதை தற்போது நடக்கும் சம்பவங்கள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் தீர்வு என்ற பெயரில் ஏமாற்று வித்தைகளே நடக்கின்றன. எங்களைப் பொறுத்த வரையில் இந்தப் பேச்சுக்களை கணக்கெடுக்கத் தேவையில்லை.

1987 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட - ஒற்றையாட்சி அடிப்படையில் முழுக்க முழுக்க மத்திய அரசுக்கே அதிகாரங்கள் உள்ள - இந்த 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் அடியோடு நிராகரித்தே வந்திருந்தனர். ஆனால் இப்போது அது குறித்துப் பேசுவதாகக் கூறுவதும் அதில் சிலவற்றை தரமாட்டோம் என்று கூட பகிரங்கமாக அறிவித்து தொடர்ந்து பேசுவதில் என்ன பயன் இருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில்தான் தற்போது கூட பேச்சு நடக்கிறது. தமிழ் மக்கள் ஏற்காதவொன்று குறித்து - தமிழ் மக்கள் கோருகின்றதை தரமாட்டோமெனக் கூறி - அனைவரையும் ஏமாற்றுகின்ற நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் நடக்கும் இந்தப் பேச்சுகள் உலகத்துக்குக் காட்டப்படுகின்ற படமாகவே நாங்கள் பார்க்கிறோம். இதனை நாங்கள் நிராகரிக்கின்றோம். அதேவேளையில், எம்மவர்கள் சிலர் இந்த நாடகத்தை ஆதரித்து, பேச்சுக்களுக்குச் சென்று, எமது மக்களை ஏமாற்றுகின்றனர்.

டக்ளஸ் தேவானந்தா போன்ற அரச தரப்புக்களைத் தவிர்ந்த ஏனையவர்களான தமிழ்க் கூட்டமைப்பும் சரி, விக்கினேஸ்வரன் தரப்பு என்றாலும், தேர்தல் காலங்களில் சமஷ்டி என்று மக்களிடத்தே கூறி மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டு, இப்போது 13 குறித்து பேசுகின்றனர். குறிப்பாகத் தேர்தல் காலத்தில் 13 தொடர்பில் உச்சரிக்காத இந்தத் தரப்புகள் மக்கள் வழங்கிய ஆணையை மீறிச் செயற்பட்டுச் சொந்த மக்களையும் ஏமாற்றுகின்றன.

உண்மையாகவே மக்கள் வழங்கிய ஆணையை மீறிச் செயற்படுகின்ற இந்த தரப்புகள் தாம் செய்வது தவறு எனத் தெரிந்து கொண்டுதான் 13 ஆவது குறித்துப் பேசுகின்றன. ஏனெனில் இந்த தரப்புகளுக்கு இந்தியா கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற நிலையில் தமிழ் மக்கள் என்ன கோருகின்றனர் அல்லது என்ன வேண்டும் என்ற உண்மையைச் சொல்ல இவர்களுக்கு முதுகெலும்பு கிடையாது.

சமஷ்டியைக் கைவிட்டு ஒற்றையாட்சியை ஏற்க வைக்கின்ற செயற்பாடுகள்தான் இங்கு நடக்கின்றன. அதற்கு எம்மவர்களே துணைபோவது வேடிக்கையாக உள்ளது. மக்கள் ஏற்றுக் கொள்ளாத 13 ஆவது திருத்தம் பற்றி கதைப்பது பச்சை ஏமாற்று வேலை - துரோகம்.

13 எனக் கூறி தாங்களும் ஏமாற்றப்படுகிறோம் எனத் தெரிந்து கொண்டும் தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்ற செயற்பாடுகளை இவர்கள் கைவிட வேண்டும். பேச்சு என்றவுடன் ஓடிச் செல்வதும். பின்னர் ஏமாற்றப்பட்டுள்ளோம் எனக் கூறுவதிலும் அர்த்தமில்லை. உண்மையைச் சொல்வதற்கு இவர்கள் ஏன் அஞ்சுகின்றனர்?

தேர்தல் காலங்களிலும் சரி, இங்கு வந்து மக்களிடத்திலும் சரி,சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கோருகின்றனர் என மக்களை ஏமாற்றி மக்களிடத்தே ஆணையைப் பெற்றுவிட்டு, மக்கள் விரும்பாத 13 ஆவது திருத்தம் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பது பச்சைத் துரோகம். இதனை எமது மக்கள் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும்.

# முன்னாள் காதலனால் யுவதி வெட்டிக் கொலை!

கம்பஹா மாவட்டத்தில் யுவதி ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா - மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய ஆர்.ஷிராந்தி என்ற யுவதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

ஷிராந்தியின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் கத்தியுடன் சென்ற 26 வயதுடைய இளைஞர், அவரைச் சரமாரியாக வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இந்த இளைஞர் ஷிராந்தியின் முன்னாள் காதலன் என பொலிஸ் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

சந்தேக நபரான இளைஞரை கைது செய்வதற்கானவிசாரணைகளைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தேர்தலைக் கேட்டு ‘13'ஐ குழப்பாதீர்!

## விநயமாகக் கெஞ்சுகிறார் விக்கி

**(எஸ்.நிதர்ஷன்)**

அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்ற போது அதற்கு தமிழ்த் தரப்பினரே எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது எனத் தெரிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்கினேஸ்வரன், இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது குறித்துக் கூறியவை வருமாறு:-

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது. ஆனாலும் அரசமைப்பில் இருக்கின்ற அந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றே நாம் கோருகின்றோம். அதனடிப்படையிலே தற்போது பேச்சுகளும் நடைபெற்று வருகின்றன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட இந்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென இலங்கை அரசாங்கத்தை கோருவதற்கு இந்தியாவுக்குத் தார்மீக உரிமை உள்ளது.

அதன் அடிப்படையில் தற்போது 13 ஆவது திருத்தம் குறித்துப் பேசப்படுகிறது. அதில் பொலிஸ் அதிகாரம் தரமாட்டோம் என ஜனாதிபதி கூறுகின்ற நிலைமை இருந்தாலும் பொலிஸ் அதிகாரம் எமக்கு வழங்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது.

இதற்கான பேச்சுகள் நடைபெற்று வருகின்ற நிலையில் இதனைக் குழப்பிவிடக் கூடாது. குறிப்பாக 13 ஆவது திருத்தம் தேவையில்லை என்றோ அல்லது தேர்தலை நடத்துங்கள் என்று கூறியோ இந்தப் பேச்சை யாரும் குழப்பக் கூடாது.

ஆட்சியாளர்களே 13 ஆவதை நடைமுறைப்படுத்துவது குறித்து பேசுகின்ற போது தமிழர் தரப்பினரே இதற்கு எதிராக உள்ளனர் எனக் கூறி அவர்கள் இதிலிருந்து விடுபடப் பார்ப்பார்கள். இதனைக் குழப்பிவிட அல்லது எதிர்க்கின்ற தரப்புக்களும் இருக்கின்ற நிலையில் நாம் மிகவும் கவனமான இந்த விடயங்களைக் கையாள வேண்டும்.

ஆகையால் இந்த நேரத்தில் தமிழத் தரப்பினரே 13 ஆவது திருத்தத்தை ஒரு பிரச்சினையாக மாற்றி அல்லது எதிர்த்துக் குழப்பி, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்ற செயல்முறைகளை சின்னாபின்னமாக்க வேண்டாமென தமிழ்தரப்பினரிடம் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். - என்றார் அவர்.

இது குறித்தான கடந்த பேச்சுவார்த்தையின் போது கூட சில முரண்பாடுகள் தோற்றம் பெற்றிருந்தாலும் நாம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர வேண்டி இருக்கின்றது. அதனடிப்படையில்தான் கடந்த சுற்று பேச்சு தொடர்பில் என்னோடு உரையாடிய ஜனாதிபதி அடுத்த கட்டப் பேச்சுத் தொடர்பிலும் ஆராய்ந்திருந்தார்.

எனவே 13 ஆவது குறித்து தொடர்ந்து பேசி அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளதால் அந்தப் பேச்சுக்களை நீர்த்துப் போகச் செய்யாமல் தொடர வேண்டும். ஆகையால் இந்த நேரத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவோ அல்லது குழப்புவதாகவோ நாங்கள் இருக்கக் கூடாது. எனவே அனைத்து தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். - என்றும் அவர் சொன்னார்.



# நல்லிணக்கம் பற்றிப் பேசிக்கொண்டு இனமுறுகலை ஏற்படுத்தவே முயற்சி

## ஆட்சியாளர்களைக் கடுமையாகச் சாடுகின்றார் சித்தர்

**(எஸ்.நிதர்ஷன்)**

இனங்களுக்கிடையே நல்லிணக்கம் தொடர்பில் பேசிக் கொண்டு இன முறுகலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையே ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ள புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இது பாரிய ஆபத்தை ஏற்படுத்துமெனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் தற்போது இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் இனமுறுகலை ஏற்படுத்தும் செயற்பாடுகளே தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றமையை இங்கு நடக்கின்ற சம்பவங்கள் ஊடாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அவ்வாறான சம்பவங்களுக்கு எதிராகத் தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். உண்மையிலேயே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் இனங்களுக்கிடையே முதலில் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, முறுகலை ஏற்படுத்தக் கூடாது.

ஆட்சியாளர்கள் வெறுமனே “நல்லிணக்கம்“,“நல்லிணக்கம்“ எனப் பேசிக் கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை. அதனைச் செயற்படுத்தி மக்கள் மத்தியில் அந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது.

மேலும் இன நல்லிணக்கம் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கும் நிலையில் கூட இனமுறுகல் அதிகரிக்கின்ற போது இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பிலும் பேசப்பட்டு வருகிறது. இனப் பிரச்சனைக்கான தீர்வு என்ற விடயத்தில முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் வெறும் ஏமாற்று விவகாரங்களாக அமையக் கூடாது.

இன்றைக்கு அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தச் சொல்லிக் கேட்கின்ற போது அதற்கே தென்னிலங்கை சிங்களக் கட்சிகள் எதிர்க்கின்ற நிலைமை உள்ளது. இவர்கள் எதிர்க்கின்றார்கள் என்பதற்காக அதனை நாம் கைவிட முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கோருகின்றனர். இந்த 13 ஆவதை நாங்கள் தீர்வாக ஏற்கவும் இல்லை. ஆனாலும் அரசமைப்பில் இருப்பதை முதலில் நடைமுறைப்படுத்துங்கள் என்றுதான் கோருகின்றோம்.

இதற்கான சில பேச்சுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதைவிடுத்து வழமை போன்று ஏமாற்றுகின்ற செயற்பாடாக இது அமையக் கூடாது. அவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற செயற்பாடுகள் ஆட்சியாளர்களுக்கும் நல்லதல்ல.

எனவே தமிழ் மக்கள் கோருகின்ற சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமெனக் கோருகின்றோம். - என்று அவர் மேலும் கூறினார்.

# தீர்வில் ரணிலுக்கு அக்கறை உள்ளதா?



## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

இலங்கை ஜனாதிபதி உண்மையிலேயே தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறையுடன் உள்ளாரா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 20.07.2023 அன்று புதுடெல்லி சென்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்தித்த வேளையில், இந்தியாவால் இலங்கை அதிபருக்கு 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டது.

அதன் தொடர் நடவடிக்கையாக கடந்த 26.07.2023 புதன்கிழமை மாலை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

இந்தக் கூட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் மேற்கண்ட கேள்வியை எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:

ஜனாதிபதியின் டெல்லி விஜயத்தைத் தொடர்ந்து, 24.07.2023 அன்று மாலை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு -கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரின் செயலாளர் விக்னேஸ்வரனையும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனையும் தனது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த மற்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை தாம் நியமித்திருக்கிறார் எனவும் அவர்களினூடாக 13ஆவது திருத்தம் தொடர்பாகப் பேசி நிறைவேற்ற வேண்டும் என்று கூறியமையுடன், கலாநிதி விக்னேஸ்வரன் உள்ளிட்ட 5 பேரையும் தாம் நியமித்த மூன்று பேரை உள்ளடக்கிய குழு இவர்களுடன் இணைந்து பணியாற்றலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. இவை தொடர்பாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி 26ஆம் திகதி அன்று மாலை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களை 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அழைத்திருந்தார். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் ஜே.வி.பியையும் தவிர, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மலையகத் தமிழ்க் கட்சித் தலைவர்கள், வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் கட்சி தலைவர்கள் மற்றும் ஏனைய சிங்கள கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

குறிப்பாக இலங்கை ஒரு சிங்கள – பௌத்த நாடு என்றும், தமிழ் மக்களுக்கு எவ்வித அதிகாரங்களும் பகிரப்படக் கூடாது என்றும், பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவே கூடாது என்றும்,13ஆவது திருத்தம் தேவையற்றது என்றும் கூறுகின்ற சிங்கள – பௌத்த இனவாதக் கருத்துகளையே தொடர்ந்து பேசிவருகின்ற சரத் வீரசேகர, விமல்வீரவன்ஸ, உதயகம்மன்பில ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும், மாகாணசபைத் தேர்தல்கள் உடன் நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை என்றும், மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஜனாதிபதி அதுபற்றி யோசிக்கலாம் என்றும் மேற்கண்ட இனவாத தலைவர்கள் கூறினார்கள்.

ஏனைய சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையில், பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தாங்கள் ஒத்துழைப்பார்கள் எனக் கூறினார்கள். அப்படி இருந்த பொழுதும்கூட, உங்களுக்கு மாகாண சபைத் தேர்தல் தேவையா? அதிகாரப் பகிர்வு தேவையா? – என்ற கேள்வியை முன்வைத்து ஜனாதிபதி கூட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தமை அவர் உண்மையிலேயே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதியுடன் இருக்கிறாரா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதென்பதே அவரது பிரதானமான சிந்தனையாகும். அதற்குப் பங்கம் வரக்கூடிய எவ்வித நடவடிக்கைகளையும் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. இலங்கையைப் பொருளாதார சரிவிலிருந்து மீட்பதற்காக 4பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கிய இந்தியப் பிரதமரை ரணில் விக்கிரமசிங்க டெல்லியில் சந்தித்தபொழுது, 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருந்தார். ஆகவே இந்திய பிரதமரையும் பகைத்துக் கொள்ளக் கூடாது, வடக்கு-கிழக்கு, மலையக மக்களின் வாக்கு வங்கிகளையும் இழந்துவிடக்கூடாது, சிங்கள – பௌத்த வாக்கு வங்கியையும் பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற கணக்கில் காலம் கடத்துவதே ஜனாதிபதியின் நிலைப்பாடா? – என்ற கேள்வி எழுகின்றது.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் என்பது 1988ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அரசியல் சாசனத்தில் உள்வாங்கப் பட்டது. ஆகவே அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களுடனான கூட்டம் அவசியம் தானா? என்ற கேள்வியும் எழுகின்றது.

மாறிமாறி சிங்கள – பௌத்த இனவாத ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப்பட்ட வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களும் இந்த நாட்டின் சிங்கள மக்களைப் போன்றே பூர்வீகக் குடிகளாவர். அவர்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்வதற்கும் தமது பிரதேசத்தைத் தாமே அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் சகல உரித்துகளையும் கொண்டவர்கள். அவர்கள் தங்களுக்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டதுதான் மாகாணசபை முறைமை. ஆனால் வடக்கு-கிழக்குக்கு மட்டும் அதனை மட்டுப்படுத்தாமல் சிங்களப் பகுதிகளையும் இணைத்து ஒன்பது மாகாணங்களுக்கானதாக ஜே.ஆர். ஜெயவர்த்தன மாற்றியமைத்தார். இப்பொழுதும்கூட, வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள்தான் தமக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில் ஒன்பது மாகாணங்களுக்கான அதிகாரப்பகிர்வு பற்றி ஜனாதிபதி பேசுவது அர்த்தமற்றது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை, பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள், நிதி அதிகாரங்கள் உட்பட ஒரு முழுமையான அதிகாரப் பகிர்வு என்பது அவசியமானது. இவை சிங்களப் பகுதிகளுக்குத் தேவையா, இல்லையா என்பதை ஜனாதிபதியோ, அரசோ தீர்மானிக்கலாம். ஆனால் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு இவை தேவை என்பதை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ் மக்கள் தங்களது பிறப்புரிமையான அதிகாரங்களைக் கேட்கிறார்களே தவிர, உங்களிடம் யாசகம் கேட்கவில்லை. தருவதற்கோ மறுதலிப்பதற்கோ உங்களுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாதவரை இந்த நாட்டின் எதிர்காலம் என்பது இருள்மயமானதாகவே இருக்கும் என்பதை அரசும் சிங்கள இனவாத சக்திகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே ஜனாதிபதி காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடுகளைக் கைவிட்டு, 13ஆவது திருத்தத்தை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் முழுமையாக நிறைவேற்ற முன்வரவேண்டும். – என்று உள்ளது.

# தொடருந்தில் துப்பாக்கிச்சூடு நடத்திய பாதுகாப்பு படை வீரர்

## மும்பையில் சம்பவம் நான்கு பேர் பரிதாபம்






இந்தியாவின் மும்பையில் தொடருந்தில் பாதுகாப்புப்படை வீரர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை – ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இருந்து நேற்று மராட்டியம் நோக்கி கடுகதி தொடருந்து ஒன்று சென்றுள்ளது.

மராட்டியத்தின் – பஹல்கர் மாவட்ட தொடருந்து நிலையம் அருகே தொடருந்து சென்றபோது, தொடருந்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த தொடருந்து பாதுகாப்புப்படை வீரர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் சக வீரர் மற்றும் பயணிகள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

ஓடும் தொடருந்தில் பாதுகாப்புப் படைவீரர் துப்பாக்கிச்சூடு நடத்திய–தால் அதிர்ச்சியடைந்த சக பயணிகள் பதற்றமடைந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் தொடருந்தில் பயணித்த மற்றொரு பாதுகாப்பு படை வீரர் மற்றும் மூன்று பயணி கள் என 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய பாதுகாப்புப்படை வீரர் டஹிசர் தொடருந்து நிலையம் அருகே தொடருந்து சென்றபோது அதில் இருந்து கீழே குதித்து தப்பியோடியுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த தொடருந்து பாதுகாப்புப்படையினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அத்துடன் தப்பியோடிய வீரரை தீவிர தேடுதலுக்கு பின் கைது செய்துள்ளனர்.

குறித்த பாதுகாப்புப்படை வீரரின் துப்பாக்கி பறிமுதல் செய்யப் பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

## ஹரியானாவில் ஏற்பட்ட அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது!



இந்தியாவின் ஹரியாணா மாநிலத்தில் ஏற்பட்ட அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹரியாணா மாநிலத்தின் நூஹ் பகுதியில் இடம்பெற்ற மத ஊர்வலம் ஒன்றின் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டமையை அடுத்து அங்கு இரு இனங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

அத்துடன், வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டு அமைதியின்மை ஏற்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதுவரையில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 7 பொலிஸார் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஹரியாணா காவல்துறையினர் கண்ணீர் புகை மற்றும் நீர்தாரை பிரயோகங்களை மேற் கொண்டுள்ளனர். இந்தநிலையில் நூஹ் பகுதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத் தப்பட் டுள்ளது.

அத்துடன் விடயத்துடன் சம்பந் தப்பட்ட தரப்பினர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## மணிப்பூரில் இதுவரை எவரும் சிக்கவில்லை!

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் இடம்பெற்ற வன்முறை தொடர்பான 6 வழக்குகளில், இதுவரையில் எவரையும் கைது செய்யவில்லை என மத்திய புலனாய்வு பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் வன்முறை தொடர்பான ஆறு வழக்குகள் குறித்து மத்திய புலனாய்வு பணியகம் விசாரணை நடத்த மத்திய உள்துறை அமைச்சகம் பரிந்துரைத்ததை அடுத்து, அந்த வழக்குகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை அடுத்து, 6 வழக்குகள் தொடர்பாக விசாரணை நடத்த சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப் பட்டுள்ளதாக மத்திய புலனாய்வு பணியக அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

தற்போது கடினமான சூழ் நிலைகளுக்கு மத்தியில் இந்த விசாரணை நடத்தப்படுகிறது.

இன அடிப்படையில் கடுமையான தவறுகள் நிகழும் ஒரு மாநிலத்தில் சாட்சிகளைக் கண்டறிவது கடினமான தாகும் என அந்த அதிகாரி குறிப்பிட் டுள்ளார்.

# அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம்:

# ரஷ்யாவின் அறிவிப்பால் அச்ச நிலைமை!



உக்ரைன் – ரஷ்ய போரில் உக்ரைன் வெற்றி பெறும் சூழல் வந்தால் அணு ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தும் என்று ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வேடேவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சில் துணைத்தலைவராக பொறுப்பு வகிக்கும் டிமிட்ரி மெட்வேடேவ் விடுத்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு மேற்கத்தய நாடுகள் மத்தியில் அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

மேலும், ரஷ்யா – உக்ரைன் இடையிலான யுத்தம் வலுத்து வருகிறது எனவும் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வேடேவ் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ ஆதரவுடன் உக்ரைனின் தாக்குதல்கள் அதிகரித்தால் ரஷ்யா வுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## மீண்டும் நவாஸ் ஷெரீப்!



அடுத்த பொது தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் ஆட்சியை கைப்பற்றும் பட்சத்தில் நவாஸ் ஷெரீபே பிரதமராக பதவி ஏற்பார் என பாகிஸ்தானிய பிரதமரும் அவரது இளைய சகோதரருமான ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மூன்று முறை பாகிஸ்தானின் பிரதமராக செயல்பட்ட நவாஸ் ஷெரீப் நாடு கடத்தப்பட்ட நிலையில், 2019 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவில் வசித்து வருகிறார்.

எதிர்வரும் சில வாரங்களில் அவர் தாயகம் திரும்புவார் என தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர், அவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டில் மேல் நீதிமன்றத்தினால் வாழ்நாள் முழுவதும் பொதுப்பணியில் ஈடுப டுவதற்கு தகுதி அற்றவர் என அவருக்கு எதிராக தீர்ப்பளித்திருந்தது.

பனாமா பேப்பர்ஸ் வழக்கை விசாரித்த மேல்நீதிமன்றம் இந்த தீர்ப்பினை வழங்கியிருந்தது.

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக மேல் நீதிமன்றம் தற்காலிக விடுதலை வழங்குவதற்கு முன்னர் நவாஸ் ஷெரீப், ஊழல் குற்றங்களுக்காக 7 ஆண்டு சிறைத்தண்டனையினை அனுபவித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாக்னர் கூலிப்படைக்கான ஆள் சேர்ப்பு இடைநிறுத்தம்



உக்ரைன் – ரஷ்ய போரில் உக்ரைன் வெற்றி பெறும் சூழல் வந்தால் அணு ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தும் என்று ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வேடேவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சில் துணைத்தலைவராக பொறுப்பு வகிக்கும் டிமிட்ரி மெட்வேடேவ் விடுத்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு மேற்கத்தய நாடுகள் மத்தியில் அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

மேலும், ரஷ்யா – உக்ரைன் இடையிலான யுத்தம் வலுத்து வருகிறது எனவும் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வேடேவ் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ ஆதரவுடன் உக்ரைனின் தாக்குதல்கள் அதிகரித்தால் ரஷ்யா வுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## பாகிஸ்தான் குண்டு வெடிப்பு: உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆக அதிகரித்துள்ளது.

இந்த சம்பவத்தில் 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் பஜார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இஸ்லாமிய அரசியல் கட்சி கூட்டத்தின்போது குண்டு வெடிப்பு இடம்பெற்றிருந்தது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949